**INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM**
**MIDDLE SECTIONS**
**MID TERM EXAMINATION WORK SHEET – 2024-25**

**SUBJECT – TAMIL** **CLASS – VI**

# தமிழ்

**அ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து, உணர்ந்து, கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்க.**

நம் நாட்டின் தேசிய விலங்காகப் புலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. புலி இந்திய நாட்டிற்கே உரிய சிறந்த வலிமை மிக்க விலங்கு. புலி வீட்டில் வாழும் பூனையைப் போல தோற்றம் உடையது. ஆனால் அது காட்டில் வாழ்கிறது. புலியின் உடலில் பழுப்பு நிறக் குறுக்குப் பட்டைகள்அழகாக அமைந்துள்ளன. எனவே வரிப்புலி என்று கூறுகிறோம். புலியின் பார்வை கொடுமையும் கூர்மையும் மிக்கது. கண்களோ பளிங்கு போன்று விளங்குகின்றன. மெத்தென்ற கால்களில் கூரிய நகங்கள் உள்ளன. வெள்ளை மீசை கொண்ட புலி நன்கு மோப்பம் பிடிக்கும் ஆற்றல் மிக்கது. “புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது” என்பது பழமொழி. புலி மான் போன்ற விலங்குகளைக் கொன்று தின்னும்.

**வினாக்கள்** :-

1. புலியின் தோற்றம் எத்தகையது ?
2. நாம் எதனை வரிப்புலி என்கிறோம் ?
3. புலியின் பார்வை மற்றும் கண்கள் பற்றி எழுதுக.
4. எத்தகைய புலிக்கு மோப்பம் பிடிக்கும் சக்தி உண்டு ?
5. புலியைப் பற்றிய பழமொழியை எழுதுக.

## இலக்கணம்

**ஆ. சான்று தருக.**

1. உயிர் நெடில் எழுத்து இடம்பெற்றுள்ள சொல் -
2. உயிர்மெய் குறில் எழுத்துகள் மட்டும் இடம்பெற்றுள்ள சொல் -
3. வினைச்சொல் -
4. ஈரெழுத்துச் சொல் -
5. உரிச்சொல் -
6. வினைச்சொல் -

7. உயர்திணை -

8. பெண்பால் -

9. படர்க்கை இடம் -

10. பலர்பால் -

11. முன்னிலை இடம் -

12. அஃறிணை -

13. ஒன்றன்பால் -

**இ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

14. மெய் எழுத்துகள் __________ வகைப்படும்.

15. ங், ஞ், ண், ந், ம், ன் என்பன __________

16. நான்கெழுத்துச் சொல் __________

17. பெயரையும் வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் __________

18. எழுத்துகளை உச்சரிக்கம் கால அளவிற்கு __________ என்று பெயர்.

19. ஆய்த எழுத்து பெறும் மாத்திரை __________

20. ஒருவர் செய்யும் செயல் அல்லது வினையைக் குறிப்பது __________

21. சால, நனி என்பதன் பொருள் __________

22. உயர்ந்த ஒழுக்கம் உடையவரைக் குறிப்பது __________

23. பேசுவோன் முன் நின்று கேட்பவரைக் குறித்துக் கூறுவது __________

**ஈ. அடைப்புக்குள் கூறியவாறு செய்க.**

24. நீ (தன்மை இடம் ஆக்குக)

25. மணிமேகலை ( மாத்திரை எத்தனை) ?

26. தாமிரபரணி - ( 'தா' எவ்வகை எழுத்து? )

27. மலர்கள் ( எவ்வகைப்பால்? )

28. மகிழ்ந்தான் (தகுந்த உரிச்சொல் சேர்த்து எழுதுக)

29. கயல்விழி படித்தாள் (பெயர்ச்சொல்லை எழுதுக)

30. பௌர்ணமி (எத்தனை எழுத்துச்சொல்?)

31. அம்மா (எழுத்துகளை வகைப்படுத்துக)

**உ. இலக்கணக்குறிப்பு தருக**

32. பனைமரம் -
33. அ, இ, உ, எ, ஒ -
34. மதுரைக்குச் சென்றான் -
35. நான் -
36. அவர்கள் -
37. கா, ஞா, யா, தை -
38. மாநகர் -
39. மாதவன் -
40. உறுமீன் -
41. தீ -

**ஊ. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்க.**

42. அ. எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு திணை என்று பெயர்.
ஆ. எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு பால் என்று பெயர்.
இ. எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு எண் என்று பெயர்.
ஈ. எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு மாத்திரை என்று பெயர்.

43. அ. தமிழ் இலக்கணம் மூன்று வகைப்படும்.
ஆ. தமிழ் இலக்கணம் நான்கு வகைப்படும்.
இ. தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்.
ஈ. தமிழ் இலக்கணம் ஆறு வகைப்படும்.

44. அ. ங் ஞ் ண் ந் ம் ன் - வல்லினம்.
ஆ. ங் ஞ் ண் ந் ம் ன் - மெல்லினம்
இ. ங் ஞ் ண் ந் ம் ன் - இடையினம்
ஈ. ங் ஞ் ண் ந் ம் ன் - உயிரினம்

45. அ. அம்மா - மெய்யெழுத்து சொல்லின் முதலில் இடம்பெற்றுள்ளது.
ஆ. அம்மா - மெய்யெழுத்து சொல்லின் இடையீல் இடம்பெற்றுள்ளது.
இ. அம்மா - மெய்யெழுத்து சொல்லின் இறுதியில் இடம்பெற்றுள்ளது.
ஈ. அம்மா - மெய்யெழுத்து சொல்லில் இடம்பெறவில்லை.

## செய்யுட்பகுதி

### அன்னைத்தமிழே!

**அ. பொருள் கூறுக.**

1. என்னில் -
2. ஆவி -

**ஆ. பிரித்தெழுதுக.**

3. பிறப்பெடுத்தேன் -
4. மறந்துன்னை
5. சிறப்படைந்தேன்

**இ. எதிர்ச்சொல் எழுதுக.**

6. புகழ் x
7. என்னில் x

**ஈ. விடை தருக.**

8. ஆசிரியர் அன்னைத் தமிழை எவ்விதம் புகழ்கிறார் ?
9. எதைச் சொல்ல முடியவில்லை என்று நா.காமராசன் குறிப்பிடுகிறார் ?

**உ. அடி பிறழாமல் எழுதுக.**

10. ‘அன்னைத் தமிழே’ எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

### வெற்றி வேற்கை - சான்றோர் மொழி

**அ. பொருள் கூறுக.**

1. தெள்ளிய -
2. கயம் -
3. ஆல் -
4. சினை -

**ஆ. பிரித்தெழுதுக.**

5. பெரும்படை -
6. சிறப்படைந்தேன் -
7. நிழலாகும் -

**இ. பொருத்தமான நிறுத்தக்குறி இடுக.**

8. நீ எங்கிருந்து வருகிறாய்
9. ஊரிலிருந்து தாத்தா பாட்டி சித்தப்பா சித்தி வருகிறார்கள்
10. ஆகா அற்புதமாக உள்ளதே

**ஈ. விடை தருக.**

11. ஆல மரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை ?
12. வெற்றி வேற்கைப் பாடலின் பொருள் எதனுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது ?

**உ. அடி பிறழாமல் எழுதுக.**

13. 'தெள்ளிய' எனத் தொடங்கி நிழலாகும்மே வரை.

## நன்னெறி

**அ. பொருள் தருக.**

1. இன்சொல் -
2. வன்சொல் -
3. அழல்கதிர் -
4. தண்ணென் கதிர் -
5. இருநீர் -
6. அதிர்கின்ற -

**ஆ. பிரித்தெழுதுக.**

7. வியனுலகம் -
8. இன்சொல் -
9. வன்சொல் -

**இ. நிரப்புக.**

10. நன்னெறியின் ஆசிரியர் ____________________
11. நன்னெறியில் ___________ நேரிசை வெண்பாக்கள் உள்ளன.

**ஈ. விடை தருக.**

12. உலகம் எப்போது மகிழும் என்று நன்னெறி கூறுகிறது ?
13. கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும் ?

**உ. அடி பிறழாமல் எழுதுக.**

14. **'இன்சொலால்'** எனத் தொடங்கும் நன்னெறிப் பாடலை எழுதுக.

## உரைநடை - பனைமரச் சிறப்பு

**அ. பொருள் கூறுக.**

1. வல்லமை -

**ஆ. எதிர்ச்சொல் எழுதுக.**

2. விழுந்து x

**இ. பிரித்தெழுதுக.**

3. சாலையோரம்
4. குருத்தோலை
5. கரையோரம்

**ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

6. ___________ பனை மரத்தில் காய்த்துப் பழுக்கும்.
7. பண்டைய இலக்கியங்கள் பற்றித் தெரிந்து கொள்ள உதவியது __________
8. ___________ நம் தமிழ்நாட்டின் மாநில பறவையாகும்.
9. பனைமரம் __________ தாங்கும் வலிமை பெற்றது.
10. தமிழ்நாட்டின் மாநில மலர் ______________
11. நீராரும் கடலுடுத்த என்பது ________________
12. தமிழ் நாட்டின் மாநில விலங்கு ________________

**உ. பொருத்துக.**

13. ஆ - காடு
14. கை - பசு
15. பூ - கரம்
16. கா - மலர்

**ஊ. ஒரே பொருள் தரும் வேறு சொற்கள் தருக.**

17. அம்மா - _____________, _______________
18. திரள் - _____________, _______________

**எ. விடை தருக.**

19. பனைமரம் கற்பகத்தரு என்று ஏன் அழைக்கப்படுகிறது ?
20. பனைமரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம் ?
21. பனைமரத்தைச் சார்ந்து வாழும் பறவைகள் யாவை ?
22. பனை ஓலைகள் எவ்வாறு பயன்படுகின்றது ?

## கரிகாலன் கட்டிய கல்லணை

**அ. பொருள் தருக.**

1. வியத்தகு -
2. சூழ்ச்சி -

**ஆ. பிரித்தெழுதுக.**

3. அமைந்துள்ளது -
4. பெருவெள்ளம் -

**இ. சேர்த்தெழுதுக.**

5. நீர் + பாசனம் -
6. அமைந்து + உள்ளது -
7. பெருமை + வெள்ளம் -
8. அரசு + ஆட்சி -

**ஈ. எதிர்ச்சொல் எழுதுக.**

9. அடித்தளம் x
10. பழைமை x
11. தொலைவில் x

**உ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

12. தமிழ்நாட்டில் காவிரியின் முக்கிய துணையாறு _____________.
13. கல்லணை அமைந்துள்ள மாவட்டம் _____________.
14. கல்லணை ________________ நூற்றாண்டில் கட்டப்பட்டது.

**ஊ. விடை தருக.**

15. தமிழ் நாட்டிலுள்ள முக்கிய அணைகள் யாவை ?
16. கரிகாலன் கல்லணையைக் கட்ட காரணம் யாது ?

## எழுதுதல்

அ. உடல்நலமின்மையால் பள்ளிக்கு வர இயலாமை குறித்து

அல்லது

சகோதரியின் திருமணம் காரணமாக பள்ளிக்கு வர இயலாமை குறித்து வகுப்பு ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**ஆ. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

முன்னுரை - காணப்படும் இடங்கள் - மயிலின் தோற்றமும் பண்புகளும் - முடிவுரை.

**அல்லது**

முன்னுரை - நான் விரும்பும் விலங்கு - மயிலின் தோற்றமும் பண்புகளும் - முடிவுரை.

**இ. முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குப்படுத்திப் பத்தியாக்குக.**

1. கவியரசு கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார்.
2. சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927 ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார்.
3. தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கினார்.
4. இவரின் இயற்பெயர் முத்தையா.
5. இவர் 1981ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.
6. இவருக்குக் காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமுகப்பிரியா எனப் புனைப்பெயர்கள் பல உண்டு.

-----------